**அ.வ.எண். 313/2023**
**வா.சா.1 : சுசீலா**
**தேதி : 27.10.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>7 மற்றும் 8 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

தாவா 1 வது அயிட்ட சொத்தினை உங்கள் தாத்தா தம்பிராயபிள்ளை கடந்த 04.02.1927 அன்று கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து உங்கள் தாத்தா தம்பிராயபிள்ளை கடந்த 22.09.1944 அன்று கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 22 செண்ட் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் உங்கள் தாத்தா தம்பிராயபிள்ளை சுயமாக வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா தம்பிராயபிள்ளைக்கு உங்கள் தந்தை பழனியப்ப பிள்ளை தான் ஒரே வாரிசு என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா, பாட்டி இறந்த பின்பு உங்கள் தந்தை பழனியப்ப பிள்ளை தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை உங்கள் தந்தை பழனியப்பபிள்ளையும் உங்கள் சகோதரர்கள் வடிவேல் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர்கள் 6 ஆம் பிரதிவாதிக்கு கடந்த 23.08.2010 அன்று கிரையம் 1 ஏக்கர் 88 செண்ட் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். 6 ஆம் பிரதிவாதிகிருஷ்ணகுமார் 7 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் ஒரு பகுதியான 60 செண்ட் பூமியை கடந்த 15.12.2021 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 6 ஆம் பிரதிவாதிகிருஷ்ணகுமார் 8 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் மற்றொரு பகுதியான 1 ஏக்கர் 1 செண்ட் மற்றும் 27 செண்ட் பூமியை

கடந்த 15.12.2021 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் தற்போதுள்ள அமைப்பை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. அந்த புகைப்படம் தான் இது என்று சொன்னால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 மற்றும் பிவா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7 மற்றும் 8 ஆம் பிரதிவாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற பூமியில் சோலார் பேனல்களை அமைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா கிரையம் பெற்ற 3 ஏக்கர் பூமி ஒரே இடமாகத்தான் உள்ளது. 7 மற்றும் 8 ஆம் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பூமி போக மீதியுள்ள சொத்துக்கள் உங்கள் குடும்பம் வசம் தான் உள்ளதா என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அவ்வாறு யாரும் கிரையம் பெறவில்லை. 7 மற்றும் 8 ஆம் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பூமிகளை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களன் பிரிவினை ஆகாத பூர்வீக சொத்துக்கள் என்றும் அவைகளில் உங்களுக்கு பிறப்பிலிருந்து பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தாவின் சுய சம்பாத்யம் என்பதால் அவர் இறப்பிற்கு பிறகு உங்கள் தந்தை தாவா சொத்தினை அனுபவித்து வந்தார் என்றும் ஆகையால் அது அவருக்கு தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் அவ்வாறு அனுபவித்த சொத்தை அவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே 6 ஆம் பிரதிவாதிக்கு 18.12.2010 ஆம் தேதியில் விற்றதால் அதில் உங்களுக்கு பங்கு கேட்கும் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி முழுமையாக மேற்சொன்ன கிரையத்தின் வாயிலாக அனுபவித்து வந்த தாவா சொத்தில் ஒரு பகுதியினை 7, 8 பிரதிவாதிகளுக்கு விற்று விட்டதால் அதில் உங்களுக்கு பங்கு கேட்கும்

உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 7, 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் முழுமையாக அடைந்து விட்டபடியாலும், அவர்கள் சுவாதீனத்தில் உள்ளதாலும் மேற்சொன்ன 7, 8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தில் உங்களுக்கு பங்கு கேட்கும் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 18.12.2010 ஆம் தேதி உங்கள் தகப்பனாருக்கு மட்டுமே உரிமை இருந்தபோதும் முன்னெச்சரிக்கை காரணமாக உங்கள் சகோதரரிடமும் கிரையப்பத்திரத்தில் கையொப்பம் பெறப்பட்டு 6 ஆம் பிரதிவாதிக்கு விற்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 18.12.2010 அன்றே உங்கள் தகப்பனார் 6 ஆம் பிரதிவாதிக்கு விற்ற போது அந்த கிரையத்தை பற்றி எனக்கு தெரியும். 6 ஆம் பிரதிவாதிக்கு விற்ற தேதியன்றே உங்களுக்கு தெரிய வருவதால் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின்படி பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லாததால் நீங்கள் தாவா சொத்துக்குரிய நீதிமன்ற கட்டணம் சட்டப்பிரிவு 37(1) தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டத்தின் படி கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்களும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கூட்டாக சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.